**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 124/2019**

PW4– பாலு த/பெ கிருஷ்ணன்
நாள்–19.12.2023

**குறுக்கு விசாரணை :**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

தாவா சொத்து எந்த தேதியில் விற்பனை செய்யப்பட்டது என எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள கிராம வழக்கப்படி பேப்பர் எழுதப்பட்டுள்ளது என்பதை எந்த தேதியில் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியின் கணவருக்கு நான் நெருங்கிய உறவுக்காரர் என்றால் இருதரப்பினருக்கும் நான் உறவுக்காரர்தான். வாதியின் கணவர் எனது பங்காளி என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதி சுவாதீனத்தில் இருந்து வரவில்லை என்றும், வாதி உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்தை பிரதிவாதிகள் எந்த சூழ்நிலையிலும் வாதிக்கு விற்பனை செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.